www.PapaCambridge.com

UNIVERSITY OF CAMBRIDGE INTERNATIONAL EXAMINATIONS
General Certificate of Education Advanced Level

**TAMIL** **9689/04**

Paper 4 Texts **October/November 2011**

**2 hours 30 minutes**

Additional Materials: Answer Booklet/Paper

**READ THESE INSTRUCTIONS FIRST**

If you have been given an Answer Booklet, follow the instructions on the front cover of the Booklet.
Write your Centre number, candidate number and name on all the work you hand in.
Write in dark blue or black pen.
Do not use staples, paper clips, highlighters, glue or correction fluid.

Answer any **three** questions, each on a different text. You must choose **one** from Section 1, **one** from Section 2 and **one other**.
Write your answers in **Tamil** on the separate answer paper provided.
Dictionaries are **not** permitted.
You may **not** take set texts into the examination.
You should write between 500 and 600 words for each answer.
You are advised to divide your time equally between your answers.

The number of marks is given in brackets [ ] at the end of each question or part question.
At the end of the examination, fasten all your work securely together.

**முதலில் கீழே உள்ளதைப் படிக்கவும்**

விடைகள் எழுதுவதற்காக தாள்கள் கொடுக்கப்பட்டிருந்தால் அதிலுள்ள கட்டளைகளைப் பின்பற்றவும்.
நீங்கள் கொடுக்கும் எல்லா விடைத் தாள்களிலும் உங்கள் பெயர், உங்கள் எண், தேர்வு நிலைய எண் ஆகியவற்றை எழுதவும்.
கருப்பு அல்லது கரு நீல பேனா மையினால் விடைகளை எழுதவும். பசை, பிழை திருத்தும் திரவம், ஸ்டேப்பிள் பின்கள், ஹைலைட்டர்கள், பேப்பர் க்ளிப்புகள் ஆகியவற்றைப் பயன்படுத்தாதீர்கள்.

ஏதாவது **மூன்று** கேள்விகளுக்கு, வேறு வேறு பாடப் பகுதிகளிலிருந்து கேள்விகள் எடுத்து விடைகளை எழுதவும். பகுதி ஒன்றிலிருந்தும் பகுதி இரண்டிலிருந்தும் ஒவ்வொரு கேள்விக்கு கட்டாயமாக விடை தரவேண்டும். மற்றொரு கேள்வியை எந்தப் பகுதியிலிருந்தும் எடுக்கலாம்.
உங்களுடைய விடைகளை தனியாகக் கொடுக்கப்பட்டுள்ள விடைத் தாளில் **தமிழில்** எழுதவும்.
அகராதிகளைத் தேர்வு எழுதும் இடத்துக்குக் **கொண்டுபோகக்கூடாது**.
பாடப் புத்தகங்களைத் தேர்வு எழுதும் இடத்துக்குக் கொண்டுபோகக்கூடாது.
ஒவ்வொரு கேள்விக்கும் 500 முதல் 600 சொற்களில் விடை எழுதவேண்டும்.
தேர்வு எழுதவிருக்கும் நேரத்தை எல்லா விடைகளையும் எழுத சமமாகப் பங்கிட்டுக் கொள்வது நல்லது.

ஒவ்வொரு கேள்விக்கும் உரிய மதிப்பெண்கள் அடைப்புக் குறிக்குள் [ ] தரப்பட்டுள்ளது.
தேர்வு எழுதி முடித்தவுடன் விடைத் தாள்கள் எல்லாவற்றையும் சேர்த்துக் கட்டிக்கொடுக்கவும்.

This document consists of **4** printed pages.

DC (NF/AD) 32539/4
© UCLES 2011

UNIVERSITY *of* CAMBRIDGE
International Examinations

www.PapaCambridge.com

## பகுதி – 1

பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுள்ளும் இரு பிரிவுகள் உள்ளன.

**1** ஏதாவது ஒரு வினாவிற்கு (**(a)** அல்லது **(b)**) விடை தரவும்.

**(a)** நற்றிணை

அழுந்து படு விழுப் புண் வழும்பு வாய் புலரா
எவ்வ நெஞ்சத்து எஃகு எறிந்தாங்கு,
பிரிவில் புலம்பி நுவலும் குயிலினும்,
தேறு நீர் கெழீஇய யாறு நனி கொடிதே;
அதனினும் கொடியள் தானே, 'மதனின்
துய்த் தலை இதழ பைங் குருக்கத்தியொடு
பித்திகை விரவு மலர் கொள்ளீரோ?' என
வண்டு சூழ் வட்டியள் திரிதரும்
தண்டலை உழவர் தனி மட மகளே.
-மாறன் வழுதி

**(i)** குயில்,யாறு,பூக்காரி மூலமாக தலைவியின் கூற்றை புலவர் மாறன்வழுதி எப்படி வருணிக்கிறார்?

**(ii)** முல்லைத் துறையின் சிறப்புகளைக் கூறி அதில் இப்பாட்டு எவ்வாறு பொருந்தும் என்று விளக்கவும். [25]

**(b)** புறநானூறு

**(i)** வயதாகியும்கூட தான் நரையுறாமல் இருப்பதற்கு என்ன காரணம் கூறுகிறார் பிசிராந்தையார்?

**(ii)** .பாண்டிய மன்னனுக்கு அவர் வழங்கும் அறிவுரையின் சிறப்பினை விளக்கி எழுது. [25]

www.PapaCambridge.com

**2** ஏதாவது ஒரு வினாவிற்கு (**(a)** அல்லது **(b)**) விடை தரவும்.

**(a)** திருக்குறள்

நல்லாறு எனினும் கொளல்தீது மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று

இரத்தலின் இன்னாது மன்ற நிரப்பிய
தாமே தமியர் உணல்

**(i)** ஈகையின் சிறப்புகள் பற்றி வள்ளுவர் என்ன கூறுகிறார்?

**(ii)** 'மேலுலகம் இல்லெனினும் ஈதலே நன்று-என்ற சொற்களால் வள்ளுவர் வலியுறுத்தும் கருத்து என்ன? [25]

**(b)** செவிச் செல்வத்தின் உயர்வை வள்ளுவர் எப்படியெல்லாம் போற்றிப் பாடுகிறார்? [25]

**3** ஏதாவது ஒரு வினாவிற்கு (**(a)** அல்லது **(b)**) விடை தரவும்.

**(a)** தேவாரம் - அப்பர்

நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம்
நரகத்தி லிடர்ப்படோம் நடலையில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோமல்லோம்
இன்பமே யெந்நாளுந் துன்பமில்லை
தாமார்க்கும் குடியல்லாத் தன்மை யான
சங்கரன்நற் சங்கவெண் குழையோர் காதிற்
கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்
கொய்ம்மலர்ச்சே வடியிணையே குறுகி நோமே

**(i)** அப்பர் எனப்படும் திருநாவுக்கரசர் இப்பாடலுடன் துவங்கும் மறுமாற்றத் திருத்தாண்டகம் பாடக் காரணம் என்ன? இப்பாடலில் அவர் கூறுவது என்ன?

**(ii)** "மூவுருவின் முதலுருவாய் இருநான் கான மூர்த்தியே யென்றுமுப் பத்து மூவர்" – ஆறாவது பாடலில் வரும் இவ்வரிகளின் பொருள் என்ன? [25]

**(b)** சிவபெருமானின் தோற்றம்,லீலைகள் பற்றி அப்பர் தம் பாடல்களில் என்ன கூறுகிறார்? [25]

www.PapaCambridge.com

## பகுதி – 2

பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுள்ளும் இரு பிரிவுகள் உள்ளன.

ஏதாவது ஒன்றிற்கு மட்டும் (**(a)** அல்லது **(b)**) விடை தருக.

**4** இக்காலக் கவிதைகள்

**(a)** பாரதியார்
பாரதி காணும் புதுமைப் பெண்ணின் குணநலன்களை ஒரு கட்டுரை வாயிலாக விளக்கவும். [25]

**(b)** பாரதிதாசன்
தமிழ் பற்றி பாரதிதாசன் பாடிய பாடலை ,தமிழ் பற்றி பாரதி பாடிய பாடலுடன் ஒப்பிட்டு ஒரு கட்டுரை எழுதுக. [25]

ஏதாவது ஒன்றிற்கு மட்டும் (**(a)** அல்லது **(b)**) விடை தருக.

**5** நாடகம்

**(a)** மருது சகோதரர்களை தலை சிறந்த வீரர்களாகக் காட்டுவதில் நாடக ஆசிரியர் வெற்றி பெற்றாரா? உங்கள் மதிப்பீட்டை எடுத்துக்காட்டுகளோடு விளக்குங்கள். [25]

**(b)** சிவகங்கைச் சீமை நாடகத்தில் வரும் கதாபாத்திரங்களில் உங்களை மிகவும் கவர்ந்தவர் யார்? ஏன்? [25]

ஏதாவது ஒன்றிற்கு மட்டும் (**(a)** அல்லது **(b)**) விடை தருக.

**6** நவீன தமிழ்ச் சிறுகதைகள்

**(a)** மீனாட்சிசுந்தரம் பிள்ளையை மனித எந்திரம் என்று புதுமைப்பித்தன் வருணிப்பது ஏன்? [25]

**(b)** தி. ஜானகிராமன் ஒரு சிறந்த கதாசிரியர் என்பதை அவர் கதையின் வாயிலாக விளக்குக. [25]

Permission to reproduce items where third-party owned material protected by copyright is included has been sought and cleared where possible. Every reasonable effort has been made by the publisher (UCLES) to trace copyright holders, but if any items requiring clearance have unwittingly been included, the publisher will be pleased to make amends at the earliest possible opportunity.

University of Cambridge International Examinations is part of the Cambridge Assessment Group. Cambridge Assessment is the brand name of University of